THE HINDU 29 JAN 2025

# 246 postal ballots obtained for bypoll

The Hindu Bureau
ERODE

A total of 246 registered electors aged above 85 and those with disabilities cast their postal ballots for the Erode (East) Assembly constituency, to be held on February 5.

Form 12D was distributed to 2,529 electors aged over 85 and 1,570 with disabilities in the constituency.

A total of 209 electors aged above 85 and 47 with disabilities expressed their willingness to cast their postal ballots and submitted forms.

Election officials visited their homes from January 23 to 25 and on January 27 and collected their ballots.

While one elector had relocated, three electors had died, and 10 electors did not cast their votes. Thus, a total of 199 persons aged above 85 and 47 with disabilities cast their postal ballots.

**Securely stored**

The ballot papers collected in the designated boxes have been securely stored in the strong room at the Corporation Central Office.

Officials clarified that electors who expressed their willingness but did not cast their vote will not be allowed to vote during the polling.

**Mobility assistance**

District Election Officer and Collector Raja Gopal Sunkara has said that electors aged above 85 and persons with disabilities can avail of the free pickup and drop facility during the polling.

A release said 237 polling stations were established in the constituency and voters can access the facility at their doorsteps by registering at the District Election Centre at 0424-1950, the Control room at Collectorate at 0424 - 2267674, 2267675, 2267679, 96004 79643 or by calling the toll free number at 1800 425 0424.

Additionally, persons with disabilities who require three-wheelers can apply in the Election Commission of India-recognised Saksham app.

The release emphasised that all necessary steps have been taken to ensure 100% voter turnout in the byelection and encouraged those in need to utilise the service.

Scanned with OKEN Scanner

THE NEW INDIAN EXPRESS

29 JAN 2025



## MORE THAN ONE LAKH BOOTH SLIPS DISTRIBUTED

ERODE: District Election Officer Raja Gopal Sunkara inspected the task of issuing booth slips to voters in Erode East constituency on Tuesday. Returning Officer H S Srikanth said a total of 1,07,000 booth slips were distributed in the last three days. The voting will be held on February 5 and result would be declared on February 8. A total of 46 candidates, including the DMK and NTK, are in the fray. Booth slip distribution began on January 26. The process will continue till January 31. Booth slips are being issued by officials at all 237 polling stations. On Tuesday, Raja Gopal Sunkara inspected the process at Towerline Colony and Thirumal Nagar in Ward 20. Returning Officer H S Srikanth said, "There are 2,27,546 eligible voters in the constituency. Officials are going directly to voters' homes and distributing these slips. Around 1.07 lakh slips were distributed so far," he said. ENS

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 29 JAN 2025



● ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலர் ராஜ கோபால் சுன்கரா ஆய்வு செய்தார். அப்போது வாக்காளர்களிடம் அவர் கலந்துரையாடினார்.

## ஈரோடு கிழக்கில் பூத் சிலிப் விநியோகம் மாவட்ட தேர்தல் அலுவலர் ஆய்வு

■ ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு பிப்ரவரி 5-ம் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இத்தேர்தலில் 2.27 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கும் வகையில், 237 வாக்குச்சாவடிகள் தயார்படுத்தும் பணி நடந்து வருகிறது. இந்நிலையில், வாக்காளர்களுக்கு, வீடு வீடாகச் சென்று பூத் சிலிப் வழங்கும் பணி கடந்த 26-ம் தேதி தொடங்கியது. நேற்று வரை மொத்தம் 1,07,367 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. பூத் சிலிப் வழங்கும் .பணி 31-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட டவர்லைன் காலனி மற்றும் திருமால்நகர் ஆகிய பகுதிகளில் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்குவதை, மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான ராஜகோபால் சுன்கரா ஆய்வு செய்தார். வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் தகவல் சீட்டு பொறுப்பு அலுவலர் சசிகுமார், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
The Election Officer/Erode District Collector inspects the distribution of booth slips to the voters.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 29 JAN 2025

## வாக்கு எண்ணும் மைய பாதுகாப்புக்கு தீயணைப்புத் துறையினருக்கு பணி

ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் துணை ராணுவம் மற்றும் போலீஸ் பாதுகாப்புடன், தீயணைப்பு படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5-ம் தேதி நடக்கிறது. இடைத்தேர்தலில் வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அடங்கியபெட்டிகள், சித்தோடு ஐ.ஆர்.டி.டி கல்லூரியில் அமைக்கப்பட்ட வாக்கு எண்ணிக்கை மையத்துக்கு எடுத்துச் செல்லப்பட உள்ளது. சீலிடப்பட்ட அறையில் வைக்கப்பட உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாக்க துணை ராணுவம் மற்றும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை நாளான பிப்ரவரி 8-ம் தேதி காலை கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் முன்னிலையில், வாக்கு எண்ணிக்கை தொடங்கவுள்ளது. இந்நிலையில், பிப்ரவரி 5 -ம்தேதி காலை முதல் வாக்கு எண்ணிக்கை மையத்தில், 7 தீயணைப்பு வீரர்கள் ஒரு வாகனத்துடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியில் இருப்பார்கள். வாக்கு எண்ணிக்கை நிறைவு பெறும் வரை தீயணைப்பு அலுவலர்கள் பணியில் ஈடுபட உள்ளனர் என மாவட்ட தீயணைப்பு அலுவலர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

Security Duty allotted to the Fire Brigades at counting centre.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 29 JAN 2025

# இடைத்தேர்தல் கட்டுப்பாடுகளால் ஈரோடு ஜவுளி சந்தையில் வியாபாரம் பாதிப்பு

ஈரோடு

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் கட்டுப்பாடுகளால், ஜவுளிச் சந்தையில் 3-வது வாரமாக ஜவுளி விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் கனி மார்க்கெட் ஜவுளி வணிக வளாகம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளான மணிக்கூண்டு ரோடு, டி.வி.எஸ். வீதி, ஈஸ்வரன் கோயில் வீதி, என்.எம்.எஸ்.காம்பவுண்ட், காமராஜர் வீதி, பிருந்தாவீதி உள்ளிட்ட பகுதிகளில் ஜவுளி மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை நடைபெற்று வருகிறது.

இங்கு வாரந்தோறும் திங்கள்கிழமை இரவு தொடங்கி செவ்வாய்க்கிழமை இரவு வரை ஜவுளி வாரச் சந்தை நடைபெற்று வருகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கர்நாடகா, கேரளா, ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்தும், இந்த ஜவுளிச்சந்தைக்கு வியாபாரிகள் அதிக அளவில் வருவர். சாதாரண நாட்களிலேயே கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஜவுளி வியாபாரம் சந்தையில் நடைபெறும். இந்நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் நடைமுறைகளால், மூன்றாவது வாரமாக ஈரோடு ஜவுளிச்சந்தையின் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

**உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்துக்கும் மேல் எடுத்து வந்தால், பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்படும் என்பதால் வியாபாரிகள் வருகை முற்றிலுமாக தடைபட்டுள்ளது.**

உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்துக்கும் மேல் எடுத்து வந்தால், தேர்தல் பறக்கும் படையினரால் பறி முதல் செய்யப்படும் என்பதால் வியாபாரிகள் வருகை முற்றி லுமாக தடைபட்டுள்ளது.

இதுகுறித்து, கனி மார்க்கெட் வாரச்சந்தை ஜவுளி வியாபாரிகள் கூறும்போது, 'தேர்தல் ஆணைய நடை முறைகளால், ஜவுளி கொள் முதலுக்காக வெளியூர் வியாபாரிகள் வரவில்லை.

இதனால், மொத்த வியாபாரம் 10 சதவீதமும், சில்லறை வியாபாரம் 15 சதவீதமும் மட்டுமே நடைபெற்றது. தேர்தல் முடிந்த பின், கோடைக்கால ஜவுளி விற்பனை மற்றும் சீருடை விற்பனை தொடங்கும் என எதிர்பார்க்கிறோம்' என்றனர்.

Due to ECC, Erode Textile market is affected.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி    29 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# ஆளும் கட்சியினர் தேர்தல் விதி மீறல்

## தலைமை தேர்தல் அதிகாரியிடம் நாம் தமிழர் கட்சி புகார்

சென்னை, ஜன.29-

சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கிடம் நாம் தமிழர் கட்சியின் மாநில சட்டப் பிரிவு செயலாளர் சங்கர் அளித்த புகார் மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் எங்கள் கட்சி சார்பில் சீதாலட்சுமி போட்டியிடுகிறார். அங்கு போட்டியிடும் ஆளும் கட்சியான தி.மு.க.வினரால் மிரட்டப்படுகிறார். அவர் மீது மாவட்ட போலீசார் மூலம் பொய் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. உதாரணமாக, கடந்த 26-ந் தேதியில் மட்டுமே ஈரோடு போலீஸ் நிலையத்தில் அவர் மீது 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

தங்கள் செல்வாக்கினால் பல்வேறு நிலை அரசு அதிகாரிகளை ஆளும் கட்சியினர் தங்கள் வசம் வைத்துக்கொண்டு தேர்தல் நடத்தை விதிகளை மீறுகின்றனர். ஓட்டுக்காக வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்களை வழங்க ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். அவர்களின் விதி மீறல்களை தேர்தல் அலுவலர்கள் கண்டுகொள்வதில்லை. இதைத் தடுக்க கூடுதல் கண்காணிப்பு குழுக்களை நியமிக்க வேண்டும்.

பணம், பரிசுப் பொருட்களை வாக்காளர்களுக்கு வழங்குவதைத் தடுக்க துணை ராணுவப் படையை உடனடியாக கொண்டுவர வேண்டும். மாவட்ட போலீசார் நடுநிலையோடு நடந்து கொள்ளவும், நாம் தமிழர் க்ட்சியினர் மீது பொய் வழக்கு போடக்கூடாது என்று அறிவுறுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election.
Ruling party violated the ECC - NTK lodged a complaint with
The Chief Election Commissioner.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 29 JAN 2025




பன்னீர் செல்வம் பூங்கா முன்பு 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு பேனர்.

**ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்:**

# 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி 40 இடங்களில் விழிப்புணர்வு பேனர்கள்

ஈரோடு, ஜன.29-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி 40 இடங்களில் விழிப்புணர்வு பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன.

## இடைத்தேர்தல்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேலும் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் முன்கூட்டியே தபால் வாக்குகள் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி 12-டி படிவத்துடன் வாக்கு சேகரிக்கப்பட்டது. இதற்காக 4 குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் வீட்டுக்கே சென்று வாக்கு சேகரித்தனர். இந்த வாக்கு சேகரிப்பில் 246 பேர் தபால் ஓட்டு போட்டனர்.

## விழிப்புணர்வு பேனர்கள்

இதையொட்டி அனைவரும் வாக்களிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி தேர்தல் ஆணையம் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவிகள் சார்பில் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சி சார்பில் மண்டலம் வாரியாக 100 சதவீதம் வாக்களிக்கவேண்டும் என்று மாநகராட்சி பணியாளர்கள் கோலங்கள் போட்டும் வருகிறார்கள்.

இந்த நிலையில் அனைவரும் வாக்களிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி 100 சதவீதம் வாக்குப்பதிவு என்ற விழிப்புணர்வு பேனர்கள் வைக்கப்பட்டு இருக்கின்றன. இதன்படி ஈரோடு கலெக்டர் அலுவலகம், மாநகராட்சி வளாகம், பஸ் மற்றும் ரெயில் நிலையங்கள், பன்னீர்செல்வம் பூங்கா, சுவஸ்திக்கார்னர் உள்பட 40 இடங்களில் வைக்கப்பட்டு உள்ளன.

Erode East Assembly Constituency By-election.
SVEEP ACTIVITY.
Awareness Banners kept at 40 places to emphasis 100% polling.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி

29 JAN 2025

# 'பூத் சிலிப்' வழங்கும் பணியை கலெக்டர் ஆய்வு



ஈரோடு, ஜன.29-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று பூத் சிலிப் வழங்கும் பணி கடந்த 26-ந் தேதி முதல் நடந்து வருகிறது. இந்த தொகுதியில் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் உள்ளனர். நேற்று முன்தினம் வரை 75 ஆயிரத்து 288 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டு உள்ளது.

இந்தநிலையில் நேற்று திருமால்நகர், 20 டவர்லைன் காலனி ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணியை ஈரோடு மாவட்ட கலெக்டரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான ராஜகோபால் சுன்கரா ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பூத் சிலிப் பொறுப்பு அதிகாரி சசிகுமார், உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி தியாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர். இந்த பணிகள் நாளை (வெள்ளிக்கிழமை) நிறைவு பெறுகிறது.

Erode East Assembly Constituency By-election.
The Election Officer/Erode District Collector inspects the distribution of booth slips to the voters.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி

29 JAN 2025

ஈரோட்டில்

## 20 வாகனங்களில் கட்சிக்கொடிகள் அகற்றம்

ஈரோடு, ஜன.29-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு பறக்கும் படை குழுவினரும், நிலை கண்காணிப்பு குழுவினரும் பல்வேறு இடங்களில் வாகன தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் தேர்தல் நடத்தை விதிமுறை மீறி பணம், பரிசு பொருட்கள் கொண்டு செல்லப்பட்டால் பறிமுதல் செய்யப்படுகிறது.' மேலும், வாகன்ங்களில் கட்சி கொடிகள், சின்னம் போன்றவை அகற்றப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு உள்ளது.

குறிப்பாக வெளியூரில் இருந்து ஈரோட்டுக்கு வரும் வாகனங்களை கண்காணிக்க கருங்கல்பாளையம், பி.பி.அக்ரஹாரம், கொல்லம்பாளையம் ரெயில்வே நுழைவு பாலம் ஆகிய இடங்களில் நிலை கணகாணிப்பு குழுக்களின் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இதுவரை 20 வாகனங்களில் பொருத்தப்பட்டு இருந்த கட்சிக்கொடிகள் அகற்றப்பட்டு உள்ளதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

Political party flags removed from 20 vehicles in Erode.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 29 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் எதிரொலி:

# 8 தனியார் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி மறுப்பு

ஈரோடு, ஜன.29-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் எதிரொலியாக 8 தனியார் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது.

## இடைத்தேர்தல்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தை விதிமுறை அமல்படுத்தப்பட்டு உள்ளதால், தேர்தல் பிரசாரம் உள்பட அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் முறையான அனுமதிபெறவேண்டும் என்றும், அனுமதிபெறப்படாமல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

தேர்தல் பிரசாரத்துக்கு 48 மணிநேரத்துக்குமுன்பு அனுமதி பெற் வேண்டும். அதேபோல் கோவில் விழாக்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தனியார் மண்டபங்களில் நடக்கும் சுபநிகழ்ச்சிகளுக்கும் அனுமதிபெறவேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். எனவே ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அனுமதி கேட்டு விண்ணப்பங்களை பொதுமக்கள் கொடுத்து வருகின்றனர்.

## அனுமதி மறுப்பு

இதுகுறித்து தேர்தல் அதிகாரிகள் கூறியதாவது:-

கோவில் விழாக்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், திருமண மண்டபங்களில் நடத்தப்படும் சுப நிகழ்ச்சிகளுக்கும் முறையான அனுமதி பெற வேண்டும். இந்த விண்ணப்பங்களை முறையாக ஆய்வு செய்து, அரசியல் கட்சிகளின் தொடர்பான நிகழ்ச்சி எதுவும் உள்ளதா? என்று விசாரணை மேற்கொள்ளப்படும். அரசியல் கட்சிகள் தொடர்பில்லாத நிகழ்ச்சிக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அதன்படி தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து தற்போது வரை 55 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இதில் கோவில் திருவிழா, சுப நிகழ்ச்சிகள் உள்பட மொத்தம் 47 நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் தனியார் சார்பில் நடத்தப்பட இருந்த 8 நிகழ்ச்சிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Erode East Assembly Constituency By-election.
Permission declined for 8 private programmes.

Scanned with OKEN Scanner

தினமலர்                29 JAN 2025

# முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் வாக்குச்சாவடி செல்ல வாகன வசதி

ஈரோடு, ஜன.29-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்குப்பதிவு செய்ய தேவையான வாகன வசதி வழங்கப்பட உள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது. இதற்காக 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுதிக்குள் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2,529, மாற்றுத்திறனாளிகள் 1,570 பேர் உள்ளனர். அதன்படி 100 சதவீத வாக்குப் பதிவை உருவாக்கும் வகையில் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களது வாக்குகளை செலுத்திட அவர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்துச் செல்லவும் வாக்களித்த பின்னர் மீண்டும் வீடுகளுக்கு கூட்டிச் செல்லவும் தேர்தல் கமிஷன் உத்தரவின்படி வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாகன வசதி தேவைப்படுவோர் மாவட்ட தேர்தல் தொடர்பு மையத்தை 0424 1950 மற்றும் கலெக்டர் அலுவலக தேர்தல் கட்டுப்பாட்டு அறையான 0424 2267674, 2267675, 96004 79643 ஆகிய எண்களிலும், கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 0424 ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம். இது தவிர மூன்று சக்கர வாகனம் தேவைப்படும் மாற்றுத் திறனாளிகள் தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட 'SAKSHAM APP' மூலமாகவும் விண்ணப்பித்து பெறலாம்.

Erode East Assembly Constituency By-election.
Vehicle facilities arranged for the elderly and physically challenged people to cast their votes.

Scanned with OKEN Scanner

தினமலர் 29 JAN 2025

# ஈரோட்டில் 3வது நாளாக பூத் சிலிப் வழங்கல்: கலெக்டர் ஆய்வு

ஈரோடு, ஜன.29-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது. இந்த தொகுதியில் 2,27,546 வாக்காளர்கள் உள்ளனர். தேர்தலையொட்டி வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. நேற்று 3வது நாளாக வாக்காளர்களுக்கு பூத்சிலிப் வழங்கப்பட்டது. மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட வார்டு-20ல் டவர் லைன் காலனி, திருமால் நகர் ஆகிய பகுதிகளில் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



ஈரோடு கிழக்குத்தொகுதிக்குட்பட்ட திருமால்நகரில் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணியை கலெக்டர் ராஜகோபால் சுன்கரா நேரில் பார்வையிட்டார்.

இது குறித்து தேர்தல் பிரிவு அலுவலர்கள் கூறியதாவது:-

வழக்கமாக பூத் சிலிப்பில் வாக்காளர் விபரம், வாக்குச்சாவடி விவரம் மற்றும் இடம் ஆகியவை இடம்பெறும். இந்த முறை தேர்தல் கமிஷன் மூலம் வாக்காளர் பட்டியல் விவரத்தை அதற்கான ஏஜெண்டுகள் மூலம் சென்னையில் பிரிண்ட் செய்து எங்களுக்கு வழங்கப்பட்டது. இதையடுத்து உடனடியாக பூத் சிலிப் வழங்கும் பணியை தொடங்கினோம். முன்பு ஈரோட்டில் அச்சிடப்படும். தற்போது சென்னையில் அச்சடிக்கப்பட்ட பூத் சிலிப்பில் மாநிலம், தொகுதி, வாக்காளர் பெயர், பாலினம், வாக்காளர் அடையாள அட்டை எண், தந்தை அல்லது கணவர் பெயர், பாகம் எண், பாகத்தின் பெயர் வரிசை எண், வாக்குச்சாவடியின் பெயர், வாக்காளர்கள் விவரம், கடைசியாக பதிவேற்றம் செய்த நாள், சீப் எலெக்சன் அதிகாரி வெப்சைட் முகவரி, அவரது அலுவலகத்தை தொடர்பு கொள்ளும் இலவச அழைப்பு எண், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலக் விவரம், அவருக்கான இலவச அழைப்பு எண், தேர்தல் தேதி, வாக்களிக்கும் நேரம் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை மற்றும் லொக்கேஷனுடன் கூடிய கியூ.ஆர் கோடும் இடம் பெற்றுள்ளது.

இது தவிர இந்த சீட்டு அடையாள ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பூத் சிலிப் வழங்கும் பணியில் 237 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், அங்கன்வாடி, சத்துணவு பணியாளர்கள் என 600க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர். இதில் இந்தப் பணி தொடங்கிய 2 நாட்களில் 75,288 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Erode East Assembly Constituency By-election.
The Election Officer/Erode District Collector inspects the 3rd day distribution of booth slips to the voters.

Scanned with OKEN Scanner

தினமலர்        29 JAN 2025

# ஓட்டு எண்ணும் மையத்தில் தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பு

ஈரோடு, ஜன. 29-

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது.வாக்குப் பதிவு முடிந்ததும் வாக்குப்பதிவுக்கு பயன் படுத்தப்பட்ட எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு மிஷின்கள் அடங்கிய பெட்டிகள் ஈரோடு அடுத்த சித்தோடு ஐ.ஆர்.டி.டி கல்லூரியில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடி எண்ணிக்கை மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பு அறையில் வைத்து சீல் வைக்கப்படும்.

இதையடுத்து அனுமதிக்கப்பட்ட தேர்தல் அலுவலர் தவிர வேறு யாரும் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கும் பாதுகாப்பு அறை பகுதிக்கும் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஓட்டு எண்ணிக்கை நாளான பிப்ரவரி 8ம் தேதி காலை கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் முன்னிலையில் திறக்கப்பட்டு வாக்கு எண்ணிக்கை தொடங்கப்படும். அதுவரை துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ வீரர்களும், போலீசாரும் வாக்கு எண்ணிக்கை மையத்திலும், வாக்குப் பெட்டிகள் வைத்துள்ள அறையிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

இந்த நிலையில் வாக்குப் பெட்டிகள் வைத்துள்ள பாதுகாப்பு அறை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் தீ விபத்து போன்ற அசம்பாவித சம்பவங்கள் நிகழாமல் இருக்க பிப்ரவரி 5ம் தேதி காலை முதல் ஓட்டு எண்ணிக்கை மையத்தில் 7 தீயணைப்பு வீரர்கள் ஒரு வாகனத்துடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட நியமிக்கப்படுவர். அவர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியில் இருப்பார்கள். தீயணைப்பு வீரர்கள் வாக்கு எண்ணிக்கை நிறைவு பெறும் வரை அதாவது பிப்ரவரி 8ம் தேதி வரை தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள்.

இந்த தகவலை மாவட்ட தீயணைப்பு அலுவலர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

Security Duty allotted to the Fire Brigades at counting centre.

Scanned with OKEN Scanner

தினமலர்

2 9 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் கோயில் திருவிழா உட்பட 47 நிகழ்ச்சிகளுக்கு அனுமதி

ஈரோடு. ஜன. 29-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு கோயில் திருவிழா மற்றும் சுபநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற வேண்டும்.

தை மாத திருவிழா மற்றும் சுபநிகழ்ச்சிகளுக்கு அனுமதி பெற வேண்டுமென மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் பொது மக்கள் மனு அளித்து வருகின்றனர். இதில் குறிப்பாக, தனியார் மண்டபங்களில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளுக்கும் தேர் ல் ஆணையத்திடம் அனுமதி6 பற வேண்டும் என்ற விதிமுறையால், மாநகராட்சி அலுவலகத்துக்கு அதிகமானோர் வந்துள்ளனர்.

இதுகுறித்து தேர்தல் அதிகாரிகள் கூறும்போது, கோயில் திருவிழா, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் சுபநிகழ்ச்சிகளுக்கு அனுமதி கோரி, இதுவரை 55 பேர் ண்ணப்பித்திருக்கின்றனர்.

இதில், தனியார் சார்பில் நடக்க இருந்த 8 நிகழ்ச்சிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கோயில் திருவிழா, சுபநிகழ்ச்சிகள் என 47 நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றனர்.

ECC is under force in Erode.
Permission granted for 47 programmes including temple festivals.

Scanned with OKEN Scanner

தினமணி 29 JAN 2025


# வாக்காளர்களுக்கான பூத் சிலிப் வழங்கும் பணி: ஆட்சியர் ஆய்வு

ஈரோடு, ஜன. 28: ஈரோடு இடைத் தேர்தல் வாக்காளர்களுக்கான வாக்குச் சாவடி சீட்டு (பூத் சிலிப்) வழங்கும் பணியை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், ஆட்சியருமான ராஜகோபால் சுன்கரா செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு பிப்ரவரி 5-ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்தத் தொகுதியில் ஆண், பெண் வாக்காளர்கள் என 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 பேர் உள்ளனர். இவர்கள் வாக்களிக்க வசதியாக 53 இடங்களில் 237 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடி விவரங்களுடன் கூடிய வாக்குச் சாவடி சீட்டு வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்காளர்களின் வீடுகளுக்கே நேரடியாக வழங்கும் பணி கடந்த 26-ஆம் தேதி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

திங்கள்கிழமைவரை 75,288 வாக்காளர்களுக்கு வாக்குச் சாவடி சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இப்பணி வரும் 31-ஆம் தேதி வரை நடக்கிறது.



ஈரோடு டவர் லைன் காலனி பகுதியில் வாக்குச் சாவடி சீட்டு வழங்கும் பணியை நேரில் ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் ராஜகோபால் சுன்கரா.

இந்நிலையில் ஈரோடு மாநகராட்சி 20-ஆவது வார்டுக்கு உள்பட்ட டவர் லைன் காலனி மற்றும் 'திருமால்' நகர் ஆகிய பகுதிகளில் வாக்காளர்களுக்கு வாக்குச் சாவடி சீட்டு வழங்கும் பணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தப் பணிகளை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான ராஜகோபால் சுன்கரா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது வாக்காளர் பட்டியல் அலுவலர் சசிகுமார், ஈரோடு கிழக்கு தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
The Election Officer/Erode District Collector inspects the distribution of booth slips to the voters.

Scanned with OKEN Scanner

தினகரன் 29 JAN 2025

ஈரோடு இடைத்தேர்தலில் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள்

# வாக்கு செலுத்த வாகன வசதிக்கு தொடர்பு கொள்ளலாம்

ஈரோடு, ஜன. 29: ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலில் 85 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் வாக்குச் சாவடிக்கு சென்று தங்களது வாக்குகளை செலுத்திட வாகன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறவுள்ளது. இதற்காக 237 வாக்குச் சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொகுதிக்குள் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2,529 பேர் உள்ளனர். மாற்றுத்திறனாளிகள் 1,570 பேர் உள்ளனர்.

இவர்களில், 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தங்களது வாக்குகளை செலுத்திட ஏதுவாக அவர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து செல்லவும், வாக்களித்த பின்னர் மீண்டும் வீடுகளுக்கு கூட்டி செல்லவும், தேர்தல் ஆணைய உத்தரவின்படி வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வாகன வசதி தேவைப்படுவோர் மாவட்ட தேர்தல் தொடர்பு மையத்தை 0424 1950, கலெக்டர் அலுவலக தேர்தல் கட்டுப்பாட்டு அறையை 0424 2267674, 2267675 மற்றும் 96004 79643 ஆகிய எண்களிலும், மேலும், கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 0424 ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

Erode East Assembly Constituency By-election.
Elderly and physically challenged people can contact District Office for vehicle facilities to cast their votes.

Scanned with OKEN Scanner

தினகரன் 29 JAN 2025

ஈரோடு இடைத்தேர்தல் வாக்காளர்களுக்கு

# பூத் சிலிப் வழங்கும் பணியை கலெக்டர் ஆய்வு



▶ ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தலையொட்டி பூத் சிலிப் வழங்கும் பணியினை கலெக்டர் ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டார்.

ஈரோடு, ஜன. 29: ஈரோடு இடைத்தேர்தல் வாக்காளர்களுக்கான பூத் சிலிப் வழங்கும் பணியை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இந்த தொகுதியில் ஆண், பெண் வாக்காளர்கள் என 2 லட்சத்து 27ஆயிரத்து 546பேர் உள்ளனர். இவர்கள் வாக்களிக்க வசதியாக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து, வாக்குச்சாவடி விவரங்களுடன் கூடிய பூத் சிலிப் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்காளர்களின் வீடுகளுக்கே நேரடியாக வழங்கும் பணி கடந்த 26ம் தேதி முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதில், கிழக்கு தொகுதியில் நேற்று முன்தினம் வரை 75,288 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இப்பணி வருகிற 31ம் தேதி வரை நடக்கிறது.

இந்நிலையில், ஈரோடு மாநகராட்சி 20 வார்டுக்கு உட்பட்ட டவர் லைன் காலனி மற்றும் திருமால் நகர் ஆகிய பகுதிகளில் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி நேற்று நடைபெற்றது. இந்த பணிகளை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது, வாக்காளர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்படுவதை உறுதி செய்தார். இந்த ஆய்வின்போது, வாக்காளர் பட்டியல் அலுவலர் சசிகுமார், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
The Election Officer/Erode District Collector inspects the distribution of booth slips to the voters.

Scanned with OKEN Scanner

தினஜான் 29 JAN 2025

# வாகனங்களில் கட்சி கொடி அகற்றம்

ஈரோடு, ஜன. 29 ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலையொட்டி, தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் இருப்பதால், கருங்கல்பாளையம் சோதனைச்சாவடியில் 20க்கும் மேற்பட்ட வாகனங்களில் இருந்த கட்சி கொடிகள் அகற்றப்பட்டன.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு பிப்ரவரி 5ம் தேதி நடக்கிறது. 8ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளது. இத்தேர்தலையொட்டி, கிழக்கு தொகுதிக்குப்பட்ட பகுதிகளில், தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் உள்ளது. இதனையடுத்து, வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா மற்றும் பரிசு பொருட்களை கொடுப்பதை தடுக்கும் வகையில், தேர்தல் பறக்கும் படை, நிலை கண்காணிப்பு குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், துணை ராணுவத்தினர் மற்றும் போலீசாரும் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், சேலம், நாமக்கல் மாவட்டங்களில் இருந்து பள்ளிப்பாளையம் வழியாக, ஈரோட்டுக்கு வந்த 20க்கும் மேற்பட்ட வாகனங்களில் அரசியல் கட்சி கொடிகள் பொருத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து, கருங்கல்பாளையம் சோதனைச் சாவடியில் இருந்த போலீசார், அந்த கார்களை நிறுத்தி, அரசியல் கட்சி கொடியை அகற்றினர்.

Political party flags removed from the vehicles.

Scanned with OKEN Scanner

தினகரன்                29 JAN 2025

ஈரோட்டில் தேர்தல் நடத்தை விதிமுறை அமல்

# கோயில் திருவிழா, சுபநிகழ்ச்சி உட்பட 47 நிகழ்ச்சிக்கு அனுமதி

ஈரோடு, ஜன. 29: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, கோயில் திருவிழா மற்றும் சுபநிகழ்ச்சிகளுக்கு இதுவரை 47 மனுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக, தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இடைத்தேர்தலை முன்னிட்டு, ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் இருக்கிறது. இதன் காரணமாக, கோயில் திருவிழா மற்றும் சுபநிகழ்ச்சிகளுக்கு, தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற வேண்டும். இந்நிலையில், தை மாத திருவிழா மற்றும் சுபநிகழ்ச்சிகளுக்கான அனுமதியை பெற, மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையில், மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

குறிப்பாக, தனியார் மண்டபங்களில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளுக்கும் தேர்தல் ஆணையத்திடம் அனுமதிபெற வேண்டும் என்ற விதிமுறையால், மாநகராட்சி அலுவலகத்துக்கு அதிகமானோர் வந்து செல்கின்றனர்.

கோயில் திருவிழா, விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் சுப நிகழ்ச்சிகளுக்கு அனுமதி கோரி, இதுவரை 55 பேர் விண்ணப்பித்திருக்கின்றனர். இதில், தனியார் சார்பில் நடக்க இருந்த 8 நிகழ்ச்சிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கோயில் திருவிழா, சுபநிகழ்ச்சிகள் என 47 நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ECC is under force in Erode.
Permission granted for 47 programmes including temple festivals and auspicious events.

Scanned with OKEN Scanner

தினகரன்                                    29 JAN 2025

### இடைத்தேர்தல் எதிரொலி

# ஜவுளிச்சந்தை வெறிச்சோடியது



▶ சீசன் இல்லாததாலும் கிழக்கு தொகுதி தேர்தலையொட்டி கெடுபிடி காரணமாகவும் ஈரோடு ஜவுளி சந்தை அருகே உள்ள பிளாட்பார கடைகளில் விற்பனை மந்தமாக நடைபெற்றது.

ஈரோடு, ஜன. 29: ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் கனி மார்க்கெட் ஜவுளி வணிக வளாகம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளான மணிக்கூண்டு ரோடு, டிவிஎஸ் வீதி, ஈஸ்வரன் கோயில் வீதி, என்எம்எஸ் காம்பவுண்ட், காமராஜர் வீதி, பிருந்தா வீதி உள்ளிட்ட பகுதிகளில் ஜவுளி மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை நடைபெற்று வருகிறது.

இங்கு வாரந்தோறும் திங்கட்கிழமை இரவு தொடங்கி செவ்வாய்க்கிழமை இரவு வரை ஜவுளிச் சந்தை நடைபெறுகிறது. தவிர, ஜவுளி குடோன்களிலும் ஜவுளி விற்பனை நடைபெறுவது வழக்கம்.

## வியாபாரிகள் கவலை

இந்நிலையில், இந்த வார ஜவுளிச் சந்தை நேற்று முன்தினம் இரவு தொடங்கி நேற்று இரவு வரை நடைபெற்றது. கடந்த சில வாரங்களாக கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்டம் மற்றும் பொங்கல் பண்டிகைகளையொட்டி ஜவுளி விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. கடந்த 2 வாரத்துக்கு முன்னர் பொங்கல் பண்டிகை முடிவடைந்ததை தொடர்ந்து, கடந்த வாரம் ஜவுளி விற்பனை மிகவும் மந்தமாகவே காணப்பட்டது. தற்போது ஈரோடு கிழக்குத் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன.

இதனால், ரூ.50 ஆயிரத்துக்கும் மேலான தொகையை எடுத்து வர உரிய ஆவணங்கள் தேவை என்பதாலும், தீவிரவாகன சோதனை நடைபெறுவதால் வெளியூர் வியாபாரிகளின் வரத்து குறைவாகவே காணப்பட்டது.

தொடர்ந்து, இடைத்தேர்தல் முடிந்து, 8ம் தேதி வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கி கொள்ளப்பட்ட பின்னரே இயல்பு நிலை திரும்பும். அதனைத் தொடர்ந்து, கோடை கால காட்டன் ஆடைகள், பள்ளிச் சீருடைகள் விற்பனை தொடங்கிய பின்னரே வியாபாரம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக ஜவுளி வியாபாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Deserted view of Erode Textile Market.

Scanned with OKEN Scanner

மக்கள் முரசு 29 JAN 2025

# ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்: பொதுமக்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கும் பணியை ஆட்சியர் ஆய்வு

ஈரோடு, ஜன. 29

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025-யொட்டி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கும் பணி நடைபெற்று வருவதை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



இந்திய தேர்தல் ஆணையத்தால், 98 - ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்-2025 அறிவிக்கப்பட்டு, 05.02.2025 அன்று தேர்தல் நடைபெறவுள்ளது. ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் 2, 27, 546 வாக்காளர்கள் உள்ளனர். மேற்படி வாக்காளர்களுக்கு கடந்த 26.01.2025 முதல் 237 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்காளர்களின் இல்லத்திற்கு நேரடியாக சென்று வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் 26.01.2025 மற்றும் 27.01.2025 ஆகிய தேதிகளில் 75, 288 வாக்காளர்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கும் பணி 31.01.2025 வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து (28.01.2025) ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு 20 டவர்லைன் காலனி மற்றும் திருமால்நகர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கப்பட்டு வருவதை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் தகவல் சீட்டு பொறுப்பு அலுவலர் சசிகுமார், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜன் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
The Election Officer/Erode District Collector inspects the distribution of booth slips to the voters.

Scanned with OKEN Scanner

தின சூரியன்                29 JAN 2025

# ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025யொட்டி பொதுமக்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கும் பணி: கலெக்டர் நேரில் சென்று பாவையிட்டு ஆய்வு



ஈரோடு, ஜன.29

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025 யொட்டி இன்று (28.01.2025) ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கும் பணி நடைபெற்று வருவதை, மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தால், 98 ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025 அறிவிக்கப்பட்டு, 05.02.2025 அன்று தேர்தல் நடைபெறவுள்ளது. ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் 2,27,546 வாக்காளர்கள் உள்ளனர். மேற்படி வாக்காளர்களுக்கு கடந்த 26.01.2025 முதல் 237 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்காளர்களின் இல்லத்திற்கு நேரடியாக சென்று வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் 26.01.2025 மற்றும் 27.01.2025 ஆகிய தேதிகளில் 75,288 வாக்காளர்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், வாக்காளர் தகவல் சீட்டுகள் (மீதமுள்ள) வழங்கும் பணி 31.01.2025 வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் (28.01.2025) ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு 20 டவர்லைன் காலனி மற்றும் திருமால்நகர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்கு வாக்காளர் தகவல் சிட்டுகள் வழங்கப்பட்டு வருவதை; மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட கலெக்டர் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் தகவல் சிட்டு பொறுப்பு அலுவலர் சசிகுமார், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜன் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
The Election Officer/Erode District Collector inspects the distribution of booth slips to the voters.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 29 JAN 2025





# தேர்தல் விதி மீறல்



■ ஈரோடு கிழக்கு தொகுதியில், தேர்தல் நடத்தை விதி அமலில் உள்ள நிலையில், கட்சி கொடி கட்டி நேற்று வந்த கார்களில், தேர்தல் பறக்கும் படையினர் அகற்றினர். இடம்: கருங்கல்பாளையம்.

Violation of ECC.

Scanned with OKEN Scanner